

# ‘‘உனக்குள் உன்னைத் தேடு’’

நாம் காணுகின்ற இந்த புற உலகத்தை ஆட்டிப் படைப்பது எது என்பதைப் பற்றி பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி செய்தார்கள். மேலை நாட்டவர்களின் ஆராய்ச்சி முழுவதும் அதனை வெளியில் தேடுவதாக இருந்தது. பாரத தேசத்து ரிஷிகளின் ஆராய்ச்சி முழுவதும் அக உலகத்தை ஆராய்வதாக இருந்தது. புற உலகத்தில் தேடியது எல்லாம் ஆளும் திறனோ, ஆட்டிப் படைக்கும் வல்லமையோ பெற்றதாக இருக்கவில்லை. அவை யெல்லாம் அழியக் கூடியதாக இருந்தது. ஆனால் அகவுலக ஆய்வில் கண்ட கிடைத்தற்கரிய ரத்தினங்கள் தான் இந்த உலகை இயக்கும் சக்தி பெற்றிருந்தது. அந்த ரத்தினங்களை பண்டைய ரிஷிகள் நேருக்கு நேராகக் கண்டார்கள். அந்த ஞான பொக்கிஷத்தை பிரகடனம் செய்தார்கள். அதன் காரணமாகவே நம்முடைய தேசம் ஆன்மிகத்திற்கு தலைமை வகிக்கும் தகுதியினையும் பெற்றிருக்கிறது. உலகத்து மக்களுக்கு நிலையான ஆறுதலை தரக்கூடிய ஒளி அவர்களுக்குள்ளேயேதான் இருக்கிறது. இதனை உணர்த்துகின்ற வகையில் ‘‘உனக் குள்ளே உன்னைத் தேடு’’ என்ற தலைப்பில் இந்நூல் உதயமாகியுள்ளது. மாபெரும் ஞான பொக்கிஷத்தின் திறவு கோலாக இந்நூல் அமைய வேண்டும் என்கிற இலட்சிய நோக்கில் யதார்த்தமான சான்றுகள் இதில் காட்டப்பட்டுள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள 18 அத்தியாயங்களில் ஏதேனும் ஒரே ஒரு அத்தியாயத்தை தினசரி செயல் முறைக்கு கொண்டு வந்தாலே போதும். ஞானக்

கதவுகள் ஒவ்வொன்றாக திறப்பதை நீங்கள் அனுபவபூர்வமாக காண்பீர்கள். எனது தந்தையாரும், வழிகாட்டியும், ஞான குருவுமாகிய பரமஹம்ச ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் எண்ணங்களைச் செயலாக்க நான் உறுதி பூண்டுள்ளேன். அவருடைய அருள் சக்தியே என்னை ஓயாமல் செயல்படுத்தி வருகிறது. உங்கள் உள்ளத்தில் ஞான ஒளியினை ஏற்றுகின்ற இந்நூலை பல முறை படித்து வாழ்க்கையின் லட்சியத்தை நீங்கள் எட்ட வேண்டும். ஆனந்த பெருவாழ்வினைப் பெற வேண்டும். துன்பங்களை தூய்மையால் வென்று என்றும் நீங்காத செல்வம் பெற்று வாழ்வாங்கு வாழ எம்பெருமானார் ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடிகளை சிந்திக்கின்றேன்.

அன்புடன்

பரமஹம்ச ஸ்ரீ பரத்வாஜ் சுவாமிகள்